மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னது போல நெல்லை மாவட்டம் கடையநல்லூர் பகுதிக்கு மட்டும் அல்ல. பொதுவாகவே மாண்புமிகு உறுப்பினர்களின் எல்லாத் தொகுதிகளுக்கும் சேர்த்தே சொல்லிவிடுகிறேன். இந்த 5 ஆண்டு திட்டத்தில் நான் ஏற்கெனவே சொன்ன 3 கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கான அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிற விண்ணப்பங்களைத் தவிர, வேறு எதுவும் அரசிடம் இப்போது இல்லை.

தாராபுரம் கூட்டுறவு நூற்பாலையை விரிவாக்கல்

182— (*வினா எண் 10154) திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், தாராபுரத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் விரிவாக்க திட்டத்தை அருகில் உள்ள சென்னிமலையில் துவங்க அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தொகுதி மக்களுடைய கோரிக்கையை நேரிலேயே கண்டறிந்து, இத்துறையில் முன்பு பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேஸ்ட் காட்டன் மில் ஒன்றை இப்பகுதியில் நிறுவ உறுதி அளித்திருந்தார்கள். அந்தப் பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து எனக்குத் தெரியாது. கேள்வி கூட்டுறவு நூற்பு ஆலை ஆரம்பிப்பது பற்றி, வேஸ்ட் காட்டன் ஆலை அமைப்பது பற்றி அல்ல. அது குறித்துத் தனியாகக் கேள்வி போட்டால், அப்படி முன்னாள் அமைச்சர் அறிவித்து அரசிடம் பரிசிலனையில் ஏதாவது விவரங்கள் இருக்குமானால் அது குறித்துச் சேகரித்து தருகிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு துணி நூல் கழகம் மூலம் சிறப்பாக பெரியார் மாவட்டம் சிவகிரியிலே நிறுவப்பட்டுள்ள விசைத்தறி ஆலையிலே நூல் பற்றாக்குறை காரணமாக அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 'நோ வொர்க்' கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது போன்று நூல் பற்றாக்குறை அடிக்கடி ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலை இழக்கிற நிலைமை அங்கேயிருந்து வருகிறது. எனவே அந்த நூல் பற்றாக்குறையைப் போக்குகிற வகையில் புதிய நூற்பாலையை பெரியார் மாவட்டத்தில் நிறுவுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 25]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, பவர் லூம் காம்ப்ளக்ஸ் நூல் பற்றாக்குறை பற்றி கேட்கிறார்கள். பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் 25 ஆயிரம் ஸ்பின்டில்ஸ் அளவில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டு கூட்டுறவு நூற்பாலை அந்த மாவட்டத்தில் அமைக்கிற வாய்ப்பு இல்லை.

திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி நூற்பாலை விரிவாக்கத் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே கேள்வி தாராபுரத்தில் உள்ள நூற்பாலையை விரிவாக்கம் செய்வதைப் பற்றியதாகும். எனவே உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கும் இந்த ஆலை குறித்த தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை.

திரு. டி. என். முருகானந்தம்: தலைவர் அவர்களே, புதியதாக கூட்டுறவு நூற்பாலை தொடங்குவதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு உரிமங்கள் கேட்டு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏழை எளிய மக்கள் அணிவதற்கு வாய்ப்பாக பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி செய்யும் நூற்பாலைகள் துவங்க உரிமங்கள் தாராளமாக வழங்கப்படுமென்று பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே பாலியஸ்டர் நூற்பாலைகள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இந்த மூன்று நூற்பாலைகள் கூட பாலியஸ்டர் நூற்பாலைகளுக்குத்தான் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது.

வேதாரண்யம் கைக்குத்தலரிசி குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

183—(*வினா எண் 9407) திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் கைக்குத்தலரிசி குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கைகுத்தலரிசித் தொழிலில் மட்டும் ஈடுபட்டிருந்த சங்கத்தை பல தொழிற் கூட்டுறவுச் சங்கமாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.